**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8033633

1. District : மாவட்டம் சிவகங்கை — PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு — Year: ஆண்டு 2017 — FIR No.: மு.த.அ. எண் 01/2017 — Date: நாள் 09.05.2017

2. (i) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 468, 471, 474, 420 உ/இ
(ii) Act சட்டம்: இ.த.ச — Sections பிரிவுகள்: 120(b) மற்றும் 13(1)(d)(iii)
(iii) Act சட்டம்: ஊ.த.ச. 1988 — Sections பிரிவுகள்: உ/இ 13(2) ஊ.த.ச. 1988
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 2011 — Date to : நாள் வரை 2012
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09-05-2017 — Time : நேரம் 14.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
முன் விசாரணை (Preliminary Enquiry) செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — 11 KM வடக்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி — செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம் சிவகங்கை
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.B. காதர் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 58 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் — (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சிவகங்கை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. வி. கண்ணதாசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.
2. திரு. எல். செந்தில்குமார், திரைப்பட கருவி இயக்குபவர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
முன் விசாரணை (Preliminary Enquiry) செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சிவகங்கை சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு சட்டம் 1988) நீதிமன்றம் முன்பாக பணிந்த சமர்பிக்கப்படுகிறது.

இன்று 09.05.2017 ஆம் தேதி 14.00 மணிக்கு நான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பொறுப்பில் இருந்தபோது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண்.8079/2017/I&PR/SG நாள்.09.03.2017 குறிப்பாணையில் கண்ட உத்தரவின்படி காலம் 7-ல் கண்ட எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 468, 471, 474, 420 உ/இ 120(b) மற்றும் 13 (1) (d) (iii) உ/இ 13(2) ஊழல் தடுப்பு சட்டம் 1988-ன்படி சிவகங்கை ஊ.த.க. பிரிவு குற்ற எண் 01/2017 –ன்படி கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புதுக்கோட்டை இராஜகோபாலபுரம், எண்.226ஐ சேர்ந்த திரு.நீதிமான் என்பவரது புகார் மனு சிவகங்கை ஊ.த.க. பிரிவு அலுவலகத்தில் 27.06.2016-ல் பெறப்பட்டு மேல் நடவடிக்கைக்காக ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்பு துறை இயக்குநரகம் சென்னைக்கு அனுப்பப்பட்டு மேற்படி புகார் மனு மீது முதல் நிலை விசாரணை செய்யும்படி புதுக்கோட்டை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திரு.Y.சார்லஸ் நெப்போலியன் ராஜ் என்பவருக்கு சென்னை, ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்பு துறை இயக்குநரக நமூனா எண்.PE.126/2016/IPR/PK நாள்.12.07.2016-ன்படி உத்திரவிடப்பட்டது அதன்படி மேற்படி புகார் மனு மீது புதுக்கோட்டை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திரு.Y.சார்லஸ் நெப்போலியன் ராஜ் என்பவரால் முதல் நிலை விசாரணை மேற்கொள்ளப்பட்டு அந்த விசாரணையில் புகார் மனுவில் கண்டுள்ள இரண்டு குற்றச்சாட்டுகளும் கண்டறியப்பட்டு (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ............ Rank ............ to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............ பதவி ............ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.B. 9-5-2017.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.05.2017 at 15.00 hrs

Name: பெயர் M.B. தாசர்
Rank: நிலை ............ No. எண் ............
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு
சிவகங்கை. 09-05-2017

* GCP-240-34(Type 2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

அதற்கான விசாரணை அறிக்கை மேற்படி காவல் ஆய்வாளரால் இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள புதுக்கோட்டை மாவட்ட குற்றச்சாட்டை பொறுத்து புதுக்கோட்டை ஊ.த.க. பிரிவு அலுவலகத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவின் அசல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் / தனி நீதிபதி, புதுக்கோட்டை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவின் நகலின் விபரம் கீழ்கண்டவாறு உள்ளது:- அனுப்புநர் பி.நீதிமான், எண். 226, இராஜகோபாலவுரம், வைரம்ஸ் மெட்ரிக்குலேசன் பள்ளி அருகில், புதுக்கோட்டை பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு கண்காணிப்புத்துறை, சிவகங்கை மாவட்டம், அய்யா, புதுக்கோட்டை செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் 2014-ம் ஆண்டு திரைப்படகருவி இயக்குபவர் பணியிடம் நிரப்பப்பட்டது. இந்த வேலைக்கு தகுதியுடைய மற்றும் ஏழ்மையான நபர்கள் விண்ணப்பித்த போதிலும் பி.ஆர்.ஒ. பிரேமலதா அவர்கள் சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலை சேர்ந்த ரமேஷ் என்பவரிடம் ரூ.8 லட்சங்களை லஞ்சமாக பெற்றுக்கொண்டு முறைகேடாக பணியில் அமர்த்தியுள்ளார். இப்பணியில் சேருவதற்கு ரமேஷ் கொடுத்துள்ள சான்றிதழ்கள் அனைத்தும் போலியானவை. சிவகங்கை பேருந்து நிலையத்திற்கு அருகில் வீனஸ் ஜெராக்ஸ் என்ற பெயரில் (பெட்டிக்கடையை போன்ற) ஒரு கடையை நடத்தியுள்ளார்கள். அந்த கடையின் பெயரை வைத்து வீனஸ் அறக்கட்டளை என்ற பெயரில் சினிமா ஆப்ரேட்டர்க்கான போலி சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதே போன்று ரவிபாலா திரையரங்கில் சினிமா ஆப்ரேட்டராக வேலை பார்த்தது போன்றும் போலியாக அனுபவ சான்றிதழும் வாங்கியுள்ளார். மேலும் இவர் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படித்து அந்த வேலை சம்பந்தமாக மும்பையிலும், அந்தமானிலும் பயிற்சி வேலை பார்த்துக் கொண்டு இருந்த நேரத்தில், சினிமா ஆப்பேரட்டராக பயிற்சி எடுத்ததாக போலி சான்றிதழ் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்து மோசடி விபரங்களும் பி.ஆர்.ஓ பிரேமலதா அவர்களுக்கு நன்றாக தெரியும். இதற்கு இவர் முழு உடைந்தையாக இருந்துள்ளார். மேலும் சிவகங்கை மாவட்டம் புதுக்கோட்டையில் பணிபுரியும் ரமேஷ் என்பவரின் தாய் வழி சகோதரர், சிவகங்கை மாவட்ட பி.ஆர்.ஓ அலுவலகத்தி பணிபுரியும் லெ.செந்தில் குமார் என்பவர் 2011-ஆம் ஆண்டு சினிமா ஆப்ரேட்டராக பணியில் சேர்ந்துள்ளார். இவருடைய சான்றிதழ்களும் போலியானது. இவரும் பல லட்சங்களை லஞ்சமாக கொடுத்து பணியில் சேர்ந்துள்ளார். இவர் தான் வீனஸ் பெட்டிக்கடை வைத்து போலி சான்றிதழ்களை தயாரித்து ரூ.25,000/-க்கு நிறைய நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது. மேலும் இவர் சிங்கப்பூரில் பணிபுரிந்த போது, இங்கு இந்தியாவில் சினிமா ஆப்ரேட்டராக பயிற்சி எடுத்ததாக போலி சான்றிதழ் தயாரிக்கப்பட்டுள்ளது. சிவகங்கை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் சினிமா ஆப்ரேட்டர்கள் சான்றிதழ்களை பதிவு செய்துள்ளவற்றை உரிய முறையில் ஆய்வு மேற்கொண்டால் உண்மைகள் தெரிய வரும். ஆகையால் இவர்களுடைய சான்றிதழ்களின் உண்மை தன்மையை பரிசோதனை செய்தும், போலி சான்றிதழ்கள் மூலம் தமிழக அரசை ஏமாற்றி முறைகேடாக அரசுப்பணியில் சேர்ந்த ரமேஷ், லெ.செந்தில்குமார் மற்றும் லஞ்சத்தை பெற்றுக்கொண்டு முறைகேடாக பணியில் அமர்த்திய பி.ஆர்.ஓ அவர்கள் மீதும் உரிய விசாரணை மேற்கொண்டு தக்க மேல் நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேற்படி புகார் மனுவின் நகலில் கண்டுள்ள சிவகங்கை மாவட்டம் குற்றச்சாட்டை பொறுத்து திரு.கண்ணதாசன், முன்னாள் மக்கள் தொடர்பு அலுவலர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை அவர்கள் 2012-ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்ட மக்கள் தொடர்பு துறைக்கு திரைப்பட கருவி இயக்குபவருக்கான பணியிடத்திற்கு ஆட்களை தேர்வு செய்யும்போது தனது அலுவலக பதவியை தவறாக பயன்படுத்தி உள்நோக்கத்துடன் தெரிந்தே தகுதியில்லாத நபரான திரு.செந்தில்குமார் என்பவரை தேர்வு செய்துள்ளார். திரு.செந்தில்குமார் என்பவர் திரைப்பட கருவி இயக்குபவருக்கான பயிற்சி மற்றும் அனுபவம் பெறாமல் அதற்கான போலி சான்றிதழ்களை ஆஜர்படுத்தி பணியில்

M.B.
9-5-2017.

சேர்ந்துள்ளதற்கான முகாந்திரம் இருப்பது முதல் நிலை விசாரணையில் தெரியவந்துள்ளது. எனவே 1-வது எதிரி திரு.கண்ணதாசன் மற்றும் இரண்டாவது எதிரி திரு.செந்தில்குமார் ஆகியோர்களது இந்த செயல்களானது இந்திய தண்டணை சட்டப்பிரிவுகள் 468, 471, 474, 420 உ/இ 120(b) மற்றும் 13 (1) (d) (iii) உ/இ 13(2) ஊழல் தடுப்பு சட்டம் 1988-ன்படி குற்றமுறு செயலில் ஈடுபட்டுள்ளார்கள். இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை மேற்படி புகார் மனுவின் நகல் இயக்குநரக குறிப்பாணை மற்றும் விழிப்பாணையரின் கடித நகல் ஆகியவற்றை சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

M.B. 9-5-2017.

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவு,
சிவகங்கை.